அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

55 - கர்நாடக சங்கீதம்

புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

கர்நாடக சங்கீதம்

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும் பக்கங்களையும் குறுக்குக்கோடிட்டு வெட்டிவிடவும்.
2. பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழே கோடிடவும்.
3. பகுதிகளுக்கு வழங்கிய புள்ளிகளை அவ்வப் பகுதிகளின் இறுதியில் குறிப்பிட்டுக் காட்டவும்.
4. விடைகளுக்கு வழங்கப்பட்ட முழுப்புள்ளிகளை எழுதும்போது ஒவ்வொரு பகுதிக்கும் வழங்கப்பட்ட புள்ளிகளை விடையின் இறுதியில் மீண்டும் எழுதி அவற்றை கூட்டிக் காட்டி அதனைச் சுற்றி சதுரம் ஒன்றை இடுக.
5. ஐந்து பகுதிகளை கொண்டிருக்கும் வேளையில் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய மேல் எல்லைப் புள்ளி 04 எனின், அதன்படி பரீட்சார்த்தி பெற்றுள்ள புள்ளிகளை பின்வருமாறு காட்டலாம்.

உதாரணமாக (i) $\frac{03}{04}$ + (ii) $\frac{02}{04}$ + (iii) $\frac{04}{04}$ + (iv) $\frac{03}{04}$ + (v) $\frac{01}{04}$ = $\boxed{\frac{13}{20}}$

6. ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்படும் முழுப் புள்ளியை விடைத்தாளின் முதற் பக்கத்திலுள்ள உரிய அடைப்பில் வினா இலக்கத்திற்கு எதிரே குறிப்பிடுக.
7. கவனமாக முழுப் புள்ளிகளையும் கூட்டி முதற் பக்கத்தில் உரிய இடத்தில் எழுதவும்.

இறுதிப்புள்ளி கணித்தல்

- இப்பாடத்தில் 02 வினாப்பபத்திரங்கள் உண்டு.
- பத்திரம் I இல் 50 வினாக்கள் கொடுக்கப்பட்டு ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 50 புள்ளிகள் வழங்க வேண்டும்.
- பத்திரம் II இல் 08 வினாக்கள் உண்டு.
- 'அ' பகுதியிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.
- 'ஆ' பகுதியிலுள்ள 02 வினாக்களில் எவையேனும் ஒரு வினாவிற்கு விடை எழுதப்பட வேண்டும்.
- 'இ' பகுதியிலுள்ள 05 வினாக்களில் எவையேனும் 03 வினாக்களுக்கு விடை எழுதப்பட வேண்டும்.

மொத்தமாக 05 வினாக்களுக்கு பரீட்சார்த்தி விடையளிக்க வேண்டும்.

இறுதிப் புள்ளி கணித்தல் : பத்திரம் I = 50 புள்ளிகள்

பத்திரம் II = 100 புள்ளிகள்

$= 50 + \left[\frac{100}{2}\right] = 100$ புள்ளிகள்

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

55 – கர்நாடக சங்கீதம்

புள்ளித் திட்டம்

பகுதி - 'அ'

வினா இல : 01

(i) 01 புள்ளி

(ii) 01 புள்ளி

(iii) 01 புள்ளி

(iv) 01 புள்ளி

(v) 01 புள்ளி

(vi) 01 புள்ளி

(vii) 01 புள்ளி

(viii) 01 புள்ளி

(ix) 01 புள்ளி

(x) 01 புள்ளி

(xi) 02 புள்ளிகள்

(xii) 02 புள்ளிகள்

(xiii) 02 புள்ளிகள்

(xiv) 02 புள்ளிகள்

(xv) 02 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

பகுதி -'ஆ'

வினா இல : 02

(i) 05 புள்ளிகள்

(ii) 15 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

வினா இல : 03

10 + 10 = 20 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

பகுதி - 'இ'

வினா இல : 04

மொத்தப் புள்ளிகள் = 20

வினா இல : 05

(i) 06 புள்ளிகள்

(ii) 05 புள்ளிகள்

(iii) 05 புள்ளிகள்

(iv) 04 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

வினா இல : 06

10 + 10 மொத்தப் புள்ளிகள் = 20

வினா இல : 07

(i) 02 புள்ளிகள்

(ii) 05 புள்ளிகள்

(iii) 06 புள்ளிகள்

(iv) 04 புள்ளிகள்

(v) 03 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

வினா இல : 08

(i) முதலாம் பிரிவிற்கு – 20 புள்ளிகள்

அல்லது

(ii) இரண்டாம் பிரிவிற்கு – 20 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் = 20

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) ..... ✓ △ 4/5

....

(ii) ..... ✓ △ 3/5

....

(iii) ..... ✓ △ 3/5

....

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

கட்டமைப்பு கட்டுரை வீடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

பத்திரம் I இற்குரிய குறிக்கோள்கள்

- செய்முறை விடயங்களில் பெற்ற அறிவினை வெளிப்படுத்துவார்.
- உருப்படிகள், ஜனக ஜன்னிய இராகங்கள், மனோதர்ம இசை, பண்ணிசை, கிருதியை அலங்கரிக்கும் அணிகள், கமஹாங்கள் பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.
- கர்நாடக, ஹிந்துஸ்தானி, மேலைத்தேய, நாட்டார் இசைகள் பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.
- கர்நாடக, ஹிந்துஸ்தானி, மேலைத்தேய வாக்கேயக்கார்கள், இசைக்கலைஞர்கள் பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.
- வாத்தியங்கள், வாத்தியங்களின் பிரிவுகள் பற்றி இனங் காண்பார்.
- இலங்கையின் இசை வளர்ச்சி பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.

பகுதி II இற்குரிய குறிக்கோள்

- தாளதாசப் பிராணாங்களின் தனித்துவங்களை இனங்கண்டு அவை தொடர்பான விபரங்களை விளக்குவார்.

- இசை உருப்படிகளுக்கிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றின் இலட்சணங்களை விளக்குவார்.

- கற்றுக்கொண்ட உருப்படிகளை ஸ்வரதாள, அங்க அடையாளங்களுடன் எழுதுவார்.

- கர்நாடக இசை வாக்கேயகாரர்களின் வரலாறு, அவர்களது இசைப்பணிகள், அவர்கள் பெற்ற பட்டங்கள், விருதுகள், பதவிகள், அவர்கள் இயற்றிய நூல்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

- இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

- இசைக்கருவிகளை இனங்கண்டு, அவற்றின் அமைப்பினைக் கூறி, படம் வரைந்து பாகங்களைக் குறித்து வாசித்து பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் பற்றியும் விபரிப்பார்.

- மேற்கத்தேய இசைக்கலைஞர்களின் வரலாறு, இசைப்பணிகள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

- இசை நிகழ்ச்சி ஒன்றினை தயார் செய்வதற்கான செயற்பாட்டு ஒழுங்கமைப்புகளை விபரிப்பார்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

කර්ණාටක සංගීතය I கர்நாடக சங்கீதம் I Carnatic Music I	55 T I	පැය දෙකයි இரண்டு மணித்தியாலம் Two hours

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. "பார்வதி நாயகனே சரணம்" என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் மேள எண்
(1) 51 (2) 56 (3) 57 (4) 65 (5) 67

2. பின்வருவனவற்றுள் ஷாடவ வக்ர சம்பூர்ண இராகம்
(1) ரீதி கௌளை (2) பேகட (3) ஸ்ரீராகம் (4) ஸாரங்கா (5) கமாஸ்

3. ஓர் அடதாள வர்ணத்தின் அங்கங்களில் சம எடுப்பில் ஆரம்பிக்கும் அங்கம்
(1) பல்லவி (2) அனுபல்லவி (3) முத்தாயிஸ்வரம்
(4) சரணம் (5) சரணஸ்வரங்கள்

4. மனோதர்ம இசையில் மத்யமகாலம் பாடுதல் என அழைக்கப்படுவது
(1) இராகம் (2) தானம் (3) பல்லவி
(4) நிரவல் (5) கற்பனாஸ்வரம்

5. அப்பர் தேவாரத்தில் இடம்பெறும் பாவினங்களுள் ஒன்று
(1) திருநேரிசை (2) திருத்தாளச்சந்தி (3) திருவிராகம்
(4) யாழ்முரி (5) மாலைமாற்று

6. தாது - மாது சம்பந்தமான அணிகளுள் ஒன்று
(1) சிட்டைஸ்வரம் (2) மகுட ஸாகிந்தியம் (3) அனுப்பிராஸம்
(4) மத்திமகால ஸாகித்தியம் (5) யமகம்

7. 'அலகுயாழ்' என்னும் சிறப்புப் பெயரினையுடைய வாத்தியம்
(1) நாதஸ்வரம் (2) மகரயாழ் (3) கெஞ்சிரா
(4) சங்கு (5) முகர்சிங்

8. ஸரிஸதாத - ஸரிஸபாப என்னும் ஸ்வரக் கோர்வையினை இசைக்கும்போது ஏற்படும் கமகம்
(1) மூர்ச்சனை (2) ஆந்தோளிதம் (3) டாலு
(4) ஸ்புரிதம் (5) ஆஹதம்

9. இசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இந்திய நுண்கலை மன்றம் வழங்கும் விருது
(1) பத்மபூஷண் (2) இசைப்பேரறிஞர் (3) சங்கீதகலாநிபுணர்
(4) கலைமாமணி (5) இசைக்கலைமணி

10. பண்டித் ரவிசங்கர் எனும் ஹிந்துஸ்தானி இசை வல்லுனரால் வாசிக்கப்பட்டு சிறப்புப் பெயர்பெற்ற வாத்தியம்
(1) சித்தார் (2) ஸரோட் (3) ஷெனாய் (4) தபேலா (5) ஸாரங்கி

11. புன்னாகவராளி இராகத்தின் ஆரோகணம் ஆரம்பிக்கும் ஸ்வரம்
(1) மத்தியஸ்தாயி ஸட்ஜம் (2) மத்தியஸ்தாயி பஞ்சமம்
(3) மந்திரஸ்தாயி தைவதம் (4) மந்திரஸ்தாயி நிஷாதம்
(5) அனுமந்திரஸ்தாயி நிஷாதம்

12. பின்வருவனவற்றுள் மத்யமவர்ஜ இராகங்களை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு
(1) ஸ்ரீரஞ்சினி, மோகனம் (2) பிலஹரி, காம்போஜி
(3) ஹம்சத்வனி, மோகனம் (4) ஹிந்தோளம், நவரஸகன்னட
(5) ஆரபி, ஸாவேரி

13. அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுதி
(1) திருவிருத்தம் (2) மூத்த திருப்பதிகம்
(3) திருவுஞ்சல் பாடல் (4) பூதவேதாள வகுப்புப் பாடல்
(5) திருச்சாழல்

14. ஒரு இராகத்தை ஆலாபனை செய்யும்போது இடையிடையே முடிக்கப்படும் ஸ்வரம்
(1) நியாசம் (2) அபன்னியாசம் (3) வின்னியாஸம்
(4) பகுத்துவம் (5) அல்பகுத்துவம்

15. உத்சவப் பிரபந்தம் என்னும் இசைநூலின் ஆசிரியர்
(1) சுவாதித்திருநாள் மஹாராஜா (2) திருவாங்கூர் ராமனாத பாகவதர்
(3) மஹாவைத்தியனாதையர் (4) சுப்பராம தீட்சிதர்
(5) முத்தையா பாகவதர்

16. பொதுவாக ஒரு இசைக்கச்சேரியின் ஆரம்பத்தில் பாடப்படும் உருப்படி,
(1) தேவாரம் அல்லது பதம்
(2) பதம் அல்லது வர்ணம்
(3) விருத்தம் அல்லது கிருதி
(4) விநாயகர் கீர்த்தனை அல்லது ஸ்வரஜதி
(5) விநாயகர் கீர்த்தனை அல்லது வர்ணம்

17. ஈழத்து வாய்ப்பாட்டுக் கலைஞர் என். சண்முகரத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள்
(1) இசைவேந்தர், இசைக்குரிசில், சங்கீதவித்வான்
(2) இசைமாமணி, இசைஞானஜோதி, கானவாரிதி
(3) இசைவேந்தர், கானவித்யாபூஷணம், இசைச்சக்கரவர்த்தி
(4) சங்கீதவித்துவமணி, இசைவேந்தர், இசைப்புலவர்
(5) கலைச்சுடர், சங்கீதசிரோன்மணி, இசைஞானவாரிதி

18. விநாயகரால் அவர்களால் வாசித்துப் பிரபல்யம் அடைந்த இசைக்கருவி
(1) தவில் (2) முகர்சிங் (3) கெஞ்சிரா
(4) கடம் (5) நாதஸ்வரம்

19. சில கோயில்களில் ஓதுவார்கள் தேவாரம் பாடும்போது பயன்படுத்தும் ஹிந்துஸ்தானிய வாத்தியம்
(1) ஸாரங்கி (2) சித்தார் (3) ஷெனாய்
(4) ஸரோட் (5) கோட்டு வாத்தியம்

20. நரம்பு வாத்தியங்களில் சுருதியைக் கூட்டிக் குறைப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படும் பாகங்கள்
(1) ஸாரணி, பிருடை (2) பிருடை, சுருதிமணி
(3) சுருதிமணி, நாகபாசம் (4) பிருடை, நாதக்குச்சி
(5) குதிரை, மேரு

21. ஈழத்து இசைமேதை வி. தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் வாசிப்பின் சிறப்பினைக்கருதி வழங்கப்பட்ட பரிசுகள்
(1) தங்கத்தவில்க்கேடயம், வெள்ளிக்கேடயம்
(2) தங்கக் கோபுரம், தங்கக் காசு
(3) தங்கத்தவில்க்கேடயம், பொற்கிழி
(4) தங்கப் பதக்கம், தங்கக் கோபுரம்
(5) தங்கக் கோபுரம், தங்கத்தவில்க்கேடயம்

22. த்விஜாவந்தி இராகத்தின் சாயலை ஒத்த இராகத் தொகுதி
(1) ஸகானா, வராளி, கேதாரகௌளை
(2) பேகடா, யதுகுலகாம்போதி, ஸகானா
(3) ஸகானா, கேதாரகௌளை, யதுகுலகாம்போதி
(4) கேதாரகௌளை, காம்போஜி, சாரங்கா
(5) பேகடா, கேதாரகௌளை, ஆரபி

23. இருவரது பங்குபற்றுகையைக் கொண்டமைந்த தருக்களை மாத்திரம் கொண்டமைந்த தெரிவு
(1) ஜக்கினித் தரு, ஸ்வாகத தரு
(2) சம்வாத தரு, கோலாட்ட தரு
(3) வர்ணனைத் தரு, உத்தர பிரதியுத்தர தரு
(4) சம்வாத தரு, உத்தர பிரதியுத்தர தரு
(5) பிரவேசிக தரு, ஜக்கினித் தரு

24. "ஸ்வாமி நீ மனமிரங்கி..." எனும் பதவர்ணத்தில் இடம்பெறாத ஸ்வரம்
(1) பஞ்சமம் (2) சுத்த மத்யமம்
(3) சாதாரண காந்தாரம் (4) சதுஸ்ருதி தைவதம்
(5) கைவஹிகி நிஷாதம்

25. திருவாவடுதுறை இராஜரத்தினமப்பிள்ளை அவர்கள் நடித்த திரைப்படம்
(1) பக்த குசேலர் (2) கவி காளமேகம் (3) நந்தனார்
(4) காளிதாசர் (5) ரிஷ்ய சிருங்கர்

26. நாட்டுப்புற இசை நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரிக்கும்போது தவிர்க்கப்படவேண்டிய இசைக்கருவி
(1) சங்கு, பறை (2) தப்பு, உடுக்கை (3) பறை, டோல்கி
(4) சல்லாரி, மத்தளம் (5) தபேலா, வயலின்

27. "நன் நிலை வரும்போது நம்மிரு கண்ணே" எனும் பாடல்
(1) சங்கிலியன் நாடகப்பாடல் (2) கோவலன் கண்ணகி நாடகப்பாடல்
(3) வடமோடிக்கூத்துப் பாடல் (4) தேயிலைக் கொழுந்துப் பாடல்
(5) தென்மோடிக்கூத்துப் பாடல்

28. பின்வருவனவற்றுள் மனதிற்கு உற்சாகத்தைத் தரும் விறுவிறுப்பான பாடல்வகை
(1) பதவர்ணம் (2) சௌக்ககாலக் கிருதி (3) திருவாசகம்
(4) நாட்டார் பாடல் (5) ஜாவளி

29. கிற்றார் வாத்தியத்தில் உள்ள 6 தந்திகளையும் வாசிக்கும்போது இடமிருந்து வலமாக அவற்றை சுருதி கூட்டும் முறை
(1) E, B, G, D, A, E (2) G, B, E, D, A, E (3) B, G, E, A, D, E
(4) A, D, E, G, B, A (5) E, A, D, G, B, E

30. உபாங்க கண்டத்தில் அமைந்துள்ள இலட்சண கீதம்
(1) முகாரி ராகம் (2) ரவிகோடிதேஜ (3) ரேவதி ராகம்
(4) நடனமாடிய (5) வாரண முகனே

31. "ஆவினமெலாம்" எனும் சூளாதி அமைந்துள்ள தாளம்
(1) திஸ்ர அட (2) சதுஸ்ர ஏகம் (3) மிஸ்ர திரிபுடை
(4) சதுஸ்ர மட்டியம் (5) சதுஸ்ர ரூபகம்

32. இராகங்களின் வடிவம் அழிந்து போகாமல் இருப்பதற்கு காரணமானது எனக் கருதப்படும் உருப்படி
(1) கிருதி (2) கீர்த்தனை (3) வர்ணம் (4) ஜாவளி (5) தில்லானா

33. அமிர் குஸ்ரு எனும் ஹிந்துஸ்தானி வாக்கேய காரரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உருப்படி வகைகள்
(1) தரானா, கயால் (2) கரனா, குல்பானா (3) தும்ரி, தரானா
(4) துர்பத், தரானா (5) குல்பானா, தரானா

34. "பாஹிமாம் ஸ்ரீராஜராஜேஸ்வரி" என்னும் சௌககாலக் கிருதி அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண - அவரோகணம்
(1) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமரிகமரிஸ (2) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ
(3) ஸரிகமபதநிஸ் - ஸ்நிதநிபதமகரிஸ (4) ஸரிகமபதநிஸ் - ஸ்தபமரிஸ
(5) ஸரிகமபதநிஸ் - ஸ்நிபமகரிகஸ

35. பைரவி - மாஞ்சி என்னும் இராகச்சோடி ஒன்றுக்கொன்று வித்தியாசப்படக் காரணமான அம்சம்
(1) தாய் ராகம் (2) கமகம் (3) ஆரோகணம்
(4) அவரோகணம் (5) ஜன்ய ராகம்

36. "உனது பழநிமலை எனுமூரைச் சேவித்தறியேனே" என்னும் பாடல் அடிகளைக் கொண்ட உருப்படி
(1) காவடிச் சிந்து (2) பதம் (3) திருப்புகழ்
(4) திருவருட்பா (5) குறவஞ்சி

37. மகுடத்துடன் முடிக்கப்படும் சிட்டைஸ்வரம் அமையப் பெற்ற உருப்படிகளுள் ஒன்று
(1) "ப்ரோசேவாரெவருரா..." - கமாஸ் (2) "ஸ்ரீமகா கணபதி..." - கௌளை
(3) "பவனுத..." - மோகனம் (4) "நீ ஸரிஸமான..." - பைரவி
(5) "மரிவேறேகதி..." - ஆனந்தபைரவி

38. "ஆரபிமானம்..." என்னும் இராகமாலிகையில் இடம்பெறும் இராகங்களில் மாயாமாளவகௌளையின் ஜன்ய ராகம்
(1) சாமா (2) லலிதா (3) பைரவி (4) தர்பார் (5) ஆரபி

39. "மைம்மருபூங்குழல்..." என்னும் தேவாரத்தில் "மெய்ம்மொழி .... விரும்பியதே" என்னும் பாடல் இடைவெளிக்குப் பொருத்தமான தேவார அடிகள்
(1) நான்மறையோர் மிழலை விண்ணிழி கோயில்
(2) இமையாத முக்கணீச வெம்நேச விதன்கொல்
(3) புகலி நிலாவிய புண்ணியனே எம்மிறையே
(4) யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய
(5) மான்விழி மங்கையொடும் பொய்ம் மொழி

40. "வலசி வச்சி..." எனும் நவராகமாலிகை வர்ணத்தில் இடம்பெறும் பாஷாங்க இராகங்கள்
(1) கேதாரம், காம்போஜி, மோஹனம் (2) ஸ்ரீ, பிலஹரி, பேகட
(3) யதுகுலகாம்போஜி, பிலஹரி, ஸ்ரீ (4) மோகனம், கேதாரம், யதுகுலகாம்போஜி
(5) பேகட, பிலஹரி, காம்போஜி

41. தியாகராஜஸ்வாமிகளும் கோபாலகிருஷ்ணபாரதியாரும் தமது பஞ்சரத்னக் கீர்த்தனைத் தொகுதியில் வராளி இராகத்தில் இயற்றிய கீர்த்தனைகள் முறையே
(1) துடுக்குகல, பிறவாத வரம் தாரும்
(2) எந்தரோமஹானு பாவலு, சரணாகத மென்று
(3) ஸாதிஞ்சனே, பிறவாத வரம் தாரும்
(4) கன கன ருசிரா, ஆடிய பாதமே கதி
(5) கன கன ருசிரா, மறவாமல் எப்படியும்





42. நாகர் கோவில் அருணாசல அண்ணாவி அவர்களால் ஷண்முகப்பிரியா இராகத்தில் இயற்றப்பட்ட தானவர்ணம்

(1) "உன்னையன்றி யாரென்னை..." (2) "தஞ்சம் என்றாலே..."
(3) "முருகா உன்மேல்..." (4) "இன்னம் என்மனம்..."
(5) "சுவாமி நீமனமிரங்கி..."

43. சுய ஆக்கச் செயற்பாடு அல்லாதது

(1) செயற்பாடு பற்றிய கலந்துரையாடல்
(2) பிரதி செய்யப்பட்ட ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
(3) ஆக்கங்களைப் புத்தாக்கம் செய்தல்
(4) ஆக்கங்களுக்குத் தேவையான விடயங்களைச் சேகரித்தல்
(5) ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்கான ஆலோசனை செய்தல்

44. பின்வருவனவற்றுள் கானவாத்தியம் எனும் பிரிவுள் அடங்குவது

(1) 
(2) 
(3) 
(4) 
(5) 

- **45** தொடக்கம் 47 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள அலங்காரப் பகுதியினை அவதானித்து விடையளிக்குக.

ஸகாமா ‖ ஸாகமா । தா । தா ‖
கமாதா ‖ காமதா । நீ । நீ ‖

45. மேற்கூறப்பட்ட அலங்காரத்தின் முன்றாவது ஆவர்த்தனத்திற்குரிய ஸ்வர அமைப்பு

(1) மா த நீ । ம தா நீ । தா । தா ‖
(2) ம தா நீ । மா த நீ । ஸ்ா । ஸ்ா ‖
(3) ம தா நீ । ம தா நீ । ஸ்ா । ஸ்ா ‖
(4) த நீ ஸ்ா । தாநிஸ்ா । க்ா । க்ா ‖
(5) ம தா நீ । மா தா நி । ஸ்ா । ஸ்ா ‖

46. மேற்குறித்த அலங்காரம் அமைந்துள்ள இராகத்திற்குப் பொருத்தமான ஆரோகணம்

(1) ஸரிகபதஸ் (2) ஸகமபதஸ் (3) ஸரிகபநிஸ் (4) ஸகமதநிஸ் (5) ஸரிகமதநிஸ்

47. மேற்குறித்த அலங்காரம் அமைந்துள்ள தாளம், ஒரு ஆவர்த்தனத்தில் வரும் அட்சர எண்ணிக்கை என்பன முறையே,

(1) கண்ட அட, 14 (2) திஸ்ர மட்டியம், 08
(3) சங்கீர்ண திரிபுடை, 13 (4) மிஸ்ர அட, 20
(5) கண்ட திரிபுடை, 10

48. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - 20 ஆவது மேளகர்த்தாவின் ஜன்னியம்
B - சதுஸ்ருதி தைவதத்தினை அன்னிய ஸ்வரமாகக் கொண்டது
C - பண் தக்கேசியை ஒத்தது
D - ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம்
E - அந்தர காந்தாரம் சற்றுக் கூடுதலாக ஒலிக்கும்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் பைரவி இராகத்தோடு தொடர்புடைய கூற்றுக்களை மாத்திரம் கொண்ட தெரிவு

(1) A, B, D (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

49. மாணவன் ஒருவன் மெல்லிசைப்பாடல் ஒன்றை ஆக்கம் செய்வதற்கு முன்னர் அவதானிக்க வேண்டிய கற்றல் செயலொழுங்குகளின் ஆரம்ப செயற்பாடு

(1) தெரிவு செய்யப்பட்ட பாடலுக்கேற்ப மெட்டினை அமைத்துக்கொள்வார்.
(2) பாடலுக்குப் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துவார்.
(3) பாடலின் பொதுவான தன்மையைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.
(4) பாடலாக்கத்திற்குப் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்துவார்.
(5) மெல்லிசைப் பாடலுக்குரிய இசைக்கருவியை நிர்ணயிப்பார்.

50. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இராமலிங்க அடிகளால் திருவருட்பாக்கள் இயற்றப்பட்டன.
B - பாலுஸ்வாமி தீட்சிதரினால் கர்நாடக இசைக்கு வயலின் அறிமுகப்படுத்தப்பட்டது.
C - சுப்பராம தீட்சிதரினால் சங்கீத சம்பிரதாய பிரதர்சினி எனும் நூல் இயற்றப்பட்டது.
D - சுப்பிரமணிய பாரதியாரால் எழுச்சிப் பாடல்கள் பல இயற்றப்பட்டன.
E - கோபால கிருஷ்ண பாரதியாரால் ஆதுனிகமும் தமிழிசையும் தமிழ்நாட்டில் வளர்க்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் 20 ஆம் நூற்றாண்டுடன் மாத்திரம் தொடர்புபட்டவை

(1) A, C (2) A, D (3) B, E (4) C, D (5) C, E

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය
பாட இலக்கம் **55**

විෂයය
பாடம் **கர்நாடக சங்கீதம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	2	11.	4	21.	5	31.	3	41.	4
02.	ALL	12.	3	22.	3	32.	1	42.	3
03.	5	13.	4	23.	4	33.	5	43.	2
04.	2	14.	2	24.	1	34.	4	44.	1
05.	1	15.	1	25.	2	35.	2	45.	2
06.	4	16.	5	26.	5	36.	3	46.	4
07.	5	17.	3	27.	1	37.	1	47.	1
08.	2	18.	4	28.	4,5	38.	2	48.	1
09.	3	19.	1	29.	1	39.	1	49.	3
10.	1	20.	2	30.	2	40.	5	50.	2

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கை பரீட்சைத் திணைக்களம் இலங்கை பரீட்சைத் திணைக்களம்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

කර්ණාටක සංගීතය II கர்நாடக சங்கீதம் II Carnatic Music II	**55 T II**

පැය තුනයි மூன்று மணித்தியாலம் *Three hours*	අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் Additional Reading Time - 10 minutes

විභාග අංකය

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

* **'அ'** பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் **'ஆ'** பகுதியில் இருந்து **ஒரு** வினாவிற்கும் **'இ'** பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

'அ' பகுதி

1. (i) $8 + 8 + \overset{\cup}{U} + O + \overset{|}{O}$ எனும் தாளப் பிரஸ்தாரம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சர எண்ணிக்கை யாது?

(ii) 72 மேளச்சக்கரத்தில் ருகுமிதுநு எனும் சங்கேதங்களால் குறிக்கப்படும் இராகம் யாது?

(iii) விஜயராகவ பஞ்சரத்தினத்தை இயற்றியவர் யார்?

(iv) "சரஸ்வதி விதியுவதி..." என்னும் கீர்த்தனை அமைந்துள்ள ராகத்தின் மேள எண் யாது?

(v) தானம் பாடும்போது பிரகாசிக்கும் இராகங்களை எவ்வாறு அழைப்பர்?

(vi) திருமயிலைக் குறவஞ்சியை இயற்றிய ஈழத்து இசைவாணர் யார்?

(vii) செம்பை வைத்திய நாத பாகவதரால் 'சங்கீதரத்னாகரம்' எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர் யார்?

(viii) ஹிந்துஸ்தானி இசையில் "அஹிரிபைரவ்" என அழைக்கப்படும் இராகம் யாது?

(ix) Pastoral Symphony ஐ இயற்றிய ஐரோப்பிய இசைமேதை யார்?

(x) அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணிற்கு இணையான இராகம் யாது?

(xi) மனோதர்ம இசையின் பிரதான அம்சமான பல்லவி பாடுதலில் உள்ள இரு பாகங்களும் எவை?

(xii) பஞ்சபுராணம் பாடும்போது பெரும்பாலும் ஆனந்தபைரவி இராகத்தில் பாடப்படும் திருமுறைகளைக் குறிப்பிடுக.

(xiii) ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய குரல்வகைகள் **இரண்டினைத்** தருக.

(xiv) ஹிந்துஸ்தானி இசையில் இடம்பெறும் **இரு** தாளங்களைப் பெயரிடுக.

(xv) இசைத்துறையில் இளம் நுண்கலைமாணி (BFA) எனும் சிறப்புப் பட்டத்தினை வழங்கும் இலங்கையிலுள்ள **இரண்டு** உயர்கல்வி நிறுவனங்களைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

'ஆ' பகுதி

2. தாள தசப் பிராணங்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) தாள தசப் பிராணங்களைக் குறிப்பிடுக.

(ii) இவற்றுள் விரும்பிய **ஐந்தினை** விளக்குக.

(20 புள்ளிகள்)

3. பின்வரும் இசை உருப்படிகளுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றினை விளக்குக.

(i) கீத கோவிந்தம் என அழைக்கப்படும் உருப்படி

(ii) தில்லானா

(iii) சந்தப் பாவலர் பெருமானால் அருளப்பட்ட பாடல் வகை

(2 × 10 = 20 புள்ளிகள்)

'இ' பகுதி

4. பாடத்திட்டத்திற்கமைய நீர் கற்ற ஆதிதாள தான வர்ணம் **ஒன்றினை** ஸ்வர தாள அங்க அடையாளங்களுடன் முழுமையாக எழுதுக.
(இயற்றியவர் பெயர், இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்)

(20 புள்ளிகள்)

5. 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் கர்நாடக சங்கீதத்திற்கு அளப்பெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் தொடர்பாக வினவப்படும் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) அவரது இளமைக் காலத்தையும் கல்விப் பின்னணியையும் பற்றி தெளிவுபடுத்துக.

(ii) உயர்பீடங்களில் அவர் வகித்த பதவிகளைக் குறிப்பிடுக.

(iii) பெற்ற பட்டங்கள் விருதுகளைப் பெயரிடுக.

(iv) அவர் இயற்றிய நூல்கள், மொழி பெயர்த்த நூல்கள் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(20 புள்ளிகள்)

6. பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

(i) 'மாதவை நிதி' எனும் சௌககால கீர்த்தனை அமைந்துள்ள இராகம்

(ii) ஸ்ரீரஞ்சனி

(iii) ஹம்பீர் என்று அழைக்கப்படும் இராகம்

(iv) ஹிந்துஸ்தான் காபி

(2 × 10 = 20 புள்ளிகள்)

7. (i) பயான், தயான் ஆகிய பாகங்களை உடைய தாளவாத்தியத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

(ii) மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக.

(iii) மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iv) இவ் வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(v) மேற்கூறப்பட்ட வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்த கலைஞர்கள் **மூவரைக்** குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

8. மேலைத்தேய இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய "பாக்" அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத்தொண்டினையும் எழுதுக.

அல்லது

உமது பாடசாலைக் கலைவிழாவில் இடம்பெற்ற குழுஇசைப்பாடல் நிகழ்ச்சி **ஒன்றினைத்** தயார் செய்யும் செயற்பாட்டொழுங்கினைச் சுருக்கமாகத் தருக.

(20 புள்ளிகள்)

* * *

பகுதி II

'அ' பகுதி

(i) 26 - 01 புள்ளி

(ii) ரஸிகப்ரியா - 01 புள்ளி

(iii) ஷேத்ரக்ஞர் - 01 புள்ளி

(iv) 20 - 01 புள்ளி

(v) கனராகம் - 01 புள்ளி

(vi) வீரமணி ஐயர் - 01 புள்ளி

(vii) M.L. வசந்தகுமாரி - 01 புள்ளி

(viii) சக்ரவாகம் - 01 புள்ளி

(ix) பீதோவன் - 01 புள்ளி

(x) சாமா - 01 புள்ளி

(xi) பிரதமாங்கம், துவிதியாங்கம் - 02 புள்ளிகள்

(xii) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு - 02 புள்ளிகள்

(xiii) ஸொப்ரானோ (Soprano), மெஸ்ஸோ - ஸொப்ரானோ (Mezzo - Soprano), கொன்ட்ராக்டோ (Contracto)
இவற்றில் ஏதாவது இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் - 02 புள்ளிகள்

(xiv) திரிதால், ஜப்தால், தாதரா, தீப்சந்தி, ஜால், தேசாதி, பாஸ்டோ
இவற்றில் ஏதாவது இரண்டினை குறிப்பிட்டிருப்பின் - 02 புள்ளிகள்

(xv) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் / இராமநாதன் நுண்கலைப் பீடம் / R.A.F.A,
கிழக்குப் பல்கலைக்கழகம் / சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் / SVIAS,
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் / VAPA

இவற்றில் ஏதாவது இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் - 02 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் (01+01+01+01+01+01+01+01+01+01+02+02+02+02+02 = 20 புள்ளிகள்)

'ஆ' பகுதி

வினா இல : 02

தாள தசப்பிராணங்கள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) **தாள தசப்பிராணங்களைக் குறிப்பிடுக.**

(iii) **இவற்றுள் விரும்பிய ஐந்தினை விளக்குக.**

(i) **தாள தசப்பிராணங்களைக் குறிப்பிடுக.**

காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரஹம், ஜாதி, களை, லயம், யதி, பிரஸ்தாரம் என்பன

(1/2 x 10 = 05 புள்ளிகள்)

(ii) **இவற்றுள் விரும்பிய ஐந்தினை விளக்குக.**

காலம்:

தாளப்போக்கின் அளவுக்கும் பாட்டு செல்லும் வேகத்தின் அளவுக்குமுள்ள தொடர்பு குறிப்பதே காலம் எனப்படும். 100 ஒரே அளவான தாமரை இதழ்களை எடுத்து அடுக்காகக் அதனில் ஓர் ஊசியை நுழைக்கையில் எடுக்கும் நேரமே 1 கணம் எனப்படும்.

8 கணங்கள் - 1 லவம்
8 லவம் - 1 காட்டம்
8 காட்டம் - 1 நிமிடம்
8 நிமிடம் - 1 களை
2 களை - 1 சதுர்ப்பாகம்
2 சதுர்ப்பாகம் - 1 அனுத்ருதம்
2 அனுத்ருதம் - 1 த்ருதம்
2 த்ருதம் - 1 லகு
2 லகு - 1 குரு
3 லகு - 1 ப்லுதம்
4 லகு - 1 காகபாதம்

இந்த 12 அலகுகளில் முதல் 6 அலகுகளும் சூக்கும காலங்கள் எனவும் பின் 6 அலகுகள் ஸ்தூல காலங்கள் எனவும் கூறப்படும். அப்பியாச வரிசைகளில் ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு ஒரு ஸ்வரமாகப் பாடுவது முதலாம் காலம் என்றும், இரண்டுஸ்வரமாகப் பாடுவது இரண்டாம் காலமென்றும், நான்கு ஸ்வரமாகப் பாடுவது மூன்றாம் காலம் எனவும் அழைக்கப்படும். வர்ணங்கள், கீர்த்தனைகள், கிருதிகள் பாடும் பொழுது ஒரு தாள அட்சர எண்ணிக்கைக்கு 4 ஸ்வரங்கள் என்ற வகையில் முதலாம் காலத்தையும் 8 ஸ்வரங்கள் இரண்டாம் காலத்தையும் 16 ஸ்வரங்கள் மூன்றாம் காலத்தையும் குறிக்கின்றது.

2. மார்க்கம்:

இது மாத்திரையின் கால அளவைக் கொண்ட 6 காலத்தைக் குறிக்கும். "சங்கீத ரத்னாகரத்தில் லகுவின் அளவைக் கொண்டே மாத்திரையை நிச்சயித்திருப்பதால் 4 அட்சரங்களின் அளவைக் கொண்டதே (சதுஸ்ரலகு) ஒரு மாத்திரை ஆகும். அனுபவ ரீதியாகப் பொருந்தும் வழக்கில் மார்க்கங்கள் உள்ளன. இவை ஷட்மார்க்கங்கள் எனப்படும். அவையாவன:

1. தட்சிண மார்க்கம்
2. வார்த்திக மார்க்கம்
3. சித்திர மார்க்கம்
4. சித்திர தரமார்க்கம்
5. சித்திர தமமார்க்கம் &
6. அதி சித்திர தமமார்க்கம்

வகைகள்	ஒரு தாள அட்சரத்திற்கு மாத்திரைகள்	ஒரு தாள அட்சரத்திற்கு ஸ்வரங்கள்
1. தட்சிண மார்க்கம்	8	32
2. வார்த்திக மார்க்கம்	4	16
3. சித்திர மார்க்கம்	2	8
4. சித்திர தரமார்க்கம்	1	4
5. சித்திர தமமார்க்கம்	½	2
6. அதி சித்திர தமமார்க்கம்	¼	1

மேற்கூறப்பட்ட 6 மார்க்கங்களில் முதல் மூன்றும் பல்லவிகள் பாடும் முறையில் தான் வகைப்படும். எஞ்சியுள்ள மூன்றும் கிருதிகளிலும் மற்ற இசை வடிவங்களிலும் கையாளப்பட்டுள்ளன.

உதாரணமாக: சித்திரதர மார்க்கம்

1. எவரனி (தேவாம்ருதவர்ஷிணி) - தியாகராஜ சுவாமிகள்
2. தாரிணி (சுத்தசாவேரி) - தியாகராஜ சுவாமிகள்
3. மீனாக்ஷி (பூர்வி கல்யாணி) - முத்துஸ்வாமி தீக்ஷிதர்
4. சரோஜதள (சங்கராபரணம்) - சியாமா சாஸ்திரிகள்

கிரியை

தாளத்தின் அங்கங்களைக் கைச் செய்கையினால் காட்டுவது கிரியை ஆகும். இது இரண்டு வகைப்படும்.

1. ஸஸப்த கிரியை
2. நிஸப்த கிரியை

தாளத்தின் அங்கங்களைக் கையினால் ஓசையுடன் தட்டும் போது அதற்கு ஸஸப்தக் கிரியை என்று பெயர். ஆதி தாளத்தை எடுத்துக் கொண்டால் லகுவின் முதல் அட்சரத்தைத் தட்டிக் காட்டுகின்றோம். இது ஸஸப்த கிரியை ஆகும். இதற்குப் பின்பு வரும் விரலெண்ணிக்கை நிஸ்தகிரியை ஆகும்.

1. ஸஸப்த கிரியை - அனுத்ருதத்தின் தட்டு, த்ருதத்தின் ஆரம்பத்தட்டு, லகுவின் ஆரம்பத் தட்டு
2. நிஸப்த கிரியை - வீச்சு, விரல் எண்ணிக்கை, கிருஷ்யை, ஸர்ப்பிணி, பதாகம்.

அங்கம்

தாளத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை அதன் அங்கங்கள் என்று கூறுகின்றோம். இவை ஆறு வகைப்படும். இவை ஷடங்கங்கள் என்று அழைக்கப்படும். தாளத்தின் ஆறு அங்கங்களும் வருமாறு:

1. அனுத்ருதம் - U
2. த்ருதம் - 0
3. லகு - |
4. குரு - 8
5. ப்லுதம் - |
8

6. காகபாதம் - +

இவற்றில் முதல் மூன்று அங்கங்கள் மட்டும் ஸ்ளாதி, சப்த தாளங்களில் வருகின்றன தாளங்களில் ஷடங்கங்களையும் காணலாம். மேலும் ஆறு அங்கங்களும் சோடசாங்கம் எ அங்கங்களாக விரிவடைகின்றன. ஷடங்கங்களுடன் விராமம் என்னும் ஓர் அங்கத்தை வெவ் இடங்களில் பொருத்தமாக சேர்த்தல் சோடசாங்கங்கள் என்றழைக்கப்படும். இவ்வாறாகப் பெ 16 அங்கங்கள் பின்வருமாறு:


பெயர்	சோடசாங்க விபரம் குறியீடு	அட்சரகாலம்
1. அனுத்ருதம்	∪	1
2. த்ருதம்	0	2
3. த்ருதவிராமம்	∪ 0	3
4. லகு	|	3, 4, 5, 7, 9
5. லகு விராமம்	∪ |	5
6. லகு த்ருதம்	0 |	6
7. லகு த்ருத விராமம்	∪ 0 |	7
8. குரு	8	8
9. குரு விராமம்	∪ 8	9
10. குரு த்ருதம்	0 8	10
11. குருத்ருத விராமம்	∪ 0 8	11
12. புலுதம்	| 8	12
13. புலுத விராமம்	∪ | 8	13
14. புலுத த்ருதம்	0 | 8	14
15. புலுதத்ருத விராமம்	∪ 0 | 8	15
16. காகபாதம்	+	16

5. கிரஹம்


தாளத்தில் பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு கிரஹம் அல்லது எடுப்பு என்று பெயர். எடுப்பு மூவகைப்படும்.

1. ஸம எடுப்பு (ஸம கிரஹம்)
2. அனாகத எடுப்பு (அனாகத கிரஹம்)
3. அதீத எடுப்பு (அதீத கிரஹம்)


சம க்ரஹம் - தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல்
உதாரணம்: ஸதாபாலய - மோகனம்




அனாகத க்ரஹம்- தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பித்தல்
உதாரணம்: இடது பாதம் - கமாஸ்



அதீத க்ரஹம்- தாளம் தொடங்கும் முன் பாட்டு ஆரம்பித்தல் அதாவது முந்தின ஆவர்த்தத்தில் கடைசியில் பாட்டு ஆரம்பித்தல்.
உதாரணம்: சிவகாமசுந்தரி - முகாரி
ஸமமற்ற எடுப்பே விஷம எடுப்பாகும்.
எனவே அனாகத, அதீத எடுப்புகளை விஷம எடுப்பின் இரு பிரிவுகளாகக் கொள்ளலாம்.





ஜாதி

ஜாதி லகுவின் எண்ணிக்கையை நிர்ணயிக்கிறது. லகுவில் 5 ஜாதிகள் உண்டு. அவையாவன: *திஸ்ரலகு (3), சதுஸ்ரலகு (4), கண்டலகு (5), மிஸ்ரலகு (7), சங்கீர்ணலகு (9),* என்பன ஆகும். தாளங்களும் லகுவின் 5 ஜாதிபேதங்களினால் (7X 5 = 35) தாளங்களாகின்றன.

7. களை

ஒரு தாள அட்சரத்தில் காணப்படும் சிறு பகுதிக்குக் களை என்று பெயர். இது தாளங்குரிய கால நிர்ணயத்தை முடிவு செய்கிறது. களை மூன்று வகைப்படும். அவையாவன களை, த்வி களை, சதுர் களை

1. ஏக களை - ஒரு தாள அட்சரத்திற்கு ஒரு ஸ்வரமாகப் பாடுதல்.
(ஒரு களை)
2. த்வி களை - ஒரு தாள அட்சரத்திற்கு இரண்டு ஸ்வரமாகப் பாடுதல்.
(இரண்டு களை)
3. சதுஸ்ர களை - ஒரு தாள அட்சரத்திற்கு நான்கு ஸ்வரமாகப் பாடுதல்.
(நான்கு களை)

கீதங்களில் ஏக களையையும் வர்ணங்களிலும் பல கிருதிகளிலும் த்விகளையும் பல்லவிகளில் சதுர்களையையும் நாம் காணலாம்.

8. லயம்

தாளத்தின் காலப்பிரமாணம் லயம் எனப்படும். லயித்தல் ஒன்றுதல் அல்லது இசைந்திருத்தல் என்னும் பொருள் கொண்ட இச்சொல், தாளத்தின் வேகத்தையும், காலப் பிரமாணத்தையும் நிலை நிறுத்துவதாகும். லயம் மூன்று வகைப்படும்.

1. விளம்பிதலயம் (சௌக்க காலம்)
தாளத்தின் போக்கு மெதுவாகச் செல்லும்.
உதாரணம்: "ஸ்ரீகாந்திமதி" - ஹேமவதி - ஆதி - முத்துஸ்வாமி தீட்சிதர்

2. மத்திமலயம் (மத்திமகாலம்)
இதில் தாளத்தின் போக்கு நடுத்தரமாகச் செல்லும்
உதாரணம்: "மாயவித்தை" - கரஹரப்பிரியா - ஆதி - முத்துத்தாண்டவர்

3. துரித லயம் (துரித காலம்)
தாளத்தின் போக்கு வேகமாகச் செல்லும்.
உதாரணம்: "ஸரஸரஸமரே" - குந்தலவராளி - தியாகராஜர்

இம்மூன்று வித லயங்களும் மேலும் மும்மூன்றாக நுணுக்கமாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
1. விளம்பித விளம்பித லயம்
விளம்பித மத்திம லயம்
விளம்பித துரித லயம்

2. மத்திம விளம்பித லயம்
மத்திம மத்திம லயம்
மத்திம துரித லயம்

3. துரித விளம்பித லயம்
துரித மத்திம லயம்
துரித துரித லயம்

9. யதி

ஒரு தாளத்தின் அமைப்பில் உள்ள அங்கங்களைப் பல வகைகளில் விவரித்துக் காட்டும் முறைக்கு யதி என்று பெயர். இது பாட்டின் அமைப்பில் உள்ள குறிப்பிட்ட வகை அணியையும் குறிக்கும். இதன் அமைப்பைப் பொறுத்து யதிகள் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை ஷட்யதி எனப்படும். அவையாவன:

1. சமயதி
2. விஷம யதி
3. கோபுச்சயதி
4. ஸ்ரோதோவகயதி
5. டமரு யதி
6. மிருதங்க யதி

1. சமயதி

இதில் தாளத்தின் அங்கங்கள் சமமாய் வரும். "பங்கஜாக்ஷி" என்று தொடங்கும் காம்போதி இராக வர்ணத்தின் கடைசி எத்துக்கடை ஸ்வரத்தின் முதல் ஆவர்த்தம்.

நிநிதத - பபமம - ககரிஸ - நிபதஸ
மகமப - தபமப - தரிஸ்நி - பதஸ்ஸ

2. விஷமயதி

இதில் எல்லா அங்கங்களும கிரமம் தவறிக் குறுகியும், நீண்டும் வரும். இது ஓர் ஒழுங்கில் அமைய மாட்டாது.


உதாரணம்: தகதரிகிடத - த - தகதிமி - தகிட

3. கோபுச்சயதி

இது பசுவின் வாலைப்போல ஆரம்பத்தில் அகலமாகவும், பின் குறுகிக் கொண்டே போகும் அமைப்பை உடையது.

உதாரணம்: முத்துஸ்வாமி தீட்சிதரின் ஆனந்த பைரவி இராகக் கிருதி

தியாகராஜ யோக வைபவம்
ராஜ யோக வைபவம்
யோக வைபவம்
வைபவம்
பவம்



4. ஸ்ரோதோவக யதி

இது ஆற்றைப் போல் தொடக்கத்தில் குறுகியும், பின் விரிந்து கொண்டு போகும் அமைப்பை உடையது.

உதாரணம்: "சிறையாரும் மடக்கிளியே" என்று தொடங்கும் தேவாரம்

முறையாலே


பால் முறையாலே

இங்கே வா தேனொடு பால் முறையாலே

கிளியே இங்கே வாதேனொடு பால் முறையாலே

மடக்கிளியே இங்கே வாதேனொடு பால் முறையாலே


சிறையாரும் மடக்கிளியே இங்கே வாதேனொடு பால் முறையாலே



5. டமரு யதி


இது வேதமத்திம யதி எனவும் அழைக்கப்படும். உடுக்கை என்ற வாத்யம் போல் முதலில் கூடியும் பின் குறைந்து, திரும்பவும் கூடியும் வருவது.

உதாரணம்: தகதரிகிடதக - தக - தகதரிகிடதக



6. மிருதங்க யதி

மிருதங்கம் போல் நடுவில் அகன்றும், இரு பக்கங்களும் குறுகிச் செல்லும் அமைப்பைக் கொண்டது. மிருதங்க யதி ஆகும். உதாரணம்: காம்போதி இராக பங்கஜாஷி என்ற வர்ணத்தில் பதநி - மபதநி - கமபதநி - ரிகமபதநி - கமபதநி - மபதநி - பதநி



10. பிரஸ்தாரம்

பிரஸ்தாரம் என்றால் பரவுதல், விரிவு செய்தல் என்று பொருள். ஒரு தாள அங்கத்தை எத்தனை வகைகளில் நாம் விரித்துக்காட்ட முடியுமோ அத்தனை வகைகளில் விரித்துக் காட்டும் போது அந்த அங்கத்தை பிரஸ்தாரம் செய்கின்றோம் என்பது பொருள் ஆகும்.

உதாரணமாக ஒரு சதுஸ்ர லகுவை எடுத்துக்கொள்வோம்.

1. $|_4 = 4$

2. 0 + 0 = 4
   2 + 2 = 4

3. ♂ + ∪ = 4 (துருதவிராமம் + அனுத்துருதம் → 3 + 1 = 4)

4. 0 + ∪ + ∪ = 4
   2 + 1 + 1 = 4

5. ○ + ∪ + ∪ = 4
   ♌ + 1 + 1 = 4

6. ∪ + 0 + ∪ = 4
   1 + 2 + 1 = 4

7. ∪ + ∪ + ∪ + ∪ = 4
   1 + 1 + 1 + 1 = 4

8. ∪ + ∪ + 0 = 4
   1 + 1 + 2 = 4

தாள தசப்பிராணங்களைக் குறிப்பிட்டிருப்பின் - 1/2 x 10 = **5** புள்ளிகள்
இவற்றுள் ஐந்தினை விளக்கியிருப்பின் ஒரு விளக்கத்திற்கு = **2** x **5** = **10** புள்ளிகள்
ஒரு உதாரணத்திற்கு = **1** x **5** = **5** புள்ளி
= **15** புள்ளிகள்

இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 5 + 15 = **20** புள்ளிகள்

வினா இல : 03

பின்வரும் இசை உருப்படிகளுள் இரண்டினைத் தெரிவுசெய்து, அவற்றினை விளக்குக.

(i) **கீத கோவிந்தம் என அழைக்கப்படும் உருப்படி**

(ii) **தில்லானா**

(iii) **சந்தப் பாவலர் பெருமானால் அருளப்பட்ட பாடல் வகை**

(2 x 10 = 20 புள்ளிகள்)

(i) **அஷ்டபதி**

- 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயதேவரால் அருளிச் செய்யப்பட்ட மகா காவியம் அஷ்டபதியாகும்.
- இதனை கீதகோவிந்தம் என்றும் அழைப்பர்.
- சமஸ்கிருத மொழியில் இவ் உருப்படி இயற்றப்பட்டுள்ளது.
- 12 சர்க்கங்களையும், 24 பாட்டுக்களையும் கொண்டது.
- ஒவ்வொரு கீர்த்தனத்திலும் 8 சரணங்கள் இருப்பதால் அஷ்டபதி எனப் பெயர் பெற்றது.
- சிருங்கார ரஸத்தைக் கொண்ட இவ்வுருப்படி வெளிப்பொருளாக சிற்றின்பத்தையே கொண்டு வர்ணிக்கப்பட்டுள்ளது.
- அபிநயத்திற்கு உகந்த இப்பாடல்கள் நாட்டியக் கச்சேரிகளிலும் இடம் பெறுகின்றன.
- கீத கோவிந்தம் என்னும் காவியத்தின் சாகித்தியத்தில் ராதை, கிருஷ்ணன், சகி ஆகிய 3 கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன.
- கர்நாடக, ஹிந்துஸ்தானி சங்கீதம் என்ற இரு பிரிவுகள் உண்டாவதற்கு முன்னரேயே அஷ்டபதிகள் இயற்றப்பட்டமையினால் வடநாட்டிலும், தென்னாட்டிலும் பாடப்பட்டு வருகின்றன.
- நாயக, நாயகி பாவத்தில் எழுதப்பட்ட இவ்வுருப்படியில் மதுர பாவத்தின் பக்திப் பிரவாகம் வெளிப்படுகின்றது.
- ஜெயதேவரைப் பின்பற்றி தென்னிந்திய வாக்கேயக்காரர்களும் அஷ்டபதிகளை இயற்றியுள்ளனர்.
- ஜெயதேவர் தனது பெயரேயே முத்திரையாகக் கையாண்டுள்ளார்.
- கீத கோவிந்தம், சேர் எட்வின் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

உதாரணங்கள்

லலிதல வங்கல	–	வசந்தா
ராதாவதன	–	மத்தியமாவதி
ரதிஸுகசாரே	–	யமுனா கல்யாணி
நிந்ததி சந்தன	–	கானடா

இனங்காணல் - 01 புள்ளிகள்
விளக்கம் - 05 புள்ளிகள்
இயற்றியவர்கள் - 02 புள்ளிகள்
உதாரணங்கள் - 02 புள்ளிகள்

(மொத்தம் 10 புள்ளிகள்)

(ii) **தில்லானா**

- மனதிற்கு உற்சாகத்தையும், மனமகிழ்ச்சியையும் கொடுக்கவல்ல உருப்படியே தில்லானாவாகும்.
- இவ்வுருப்படி நாட்டியத்திற்குரிய உருப்படியாக அமைந்த போதிலும் இதன் கவர்ச்சிகரமான இசையின் காரணமாக இசைக் கச்சேரிகளின் இறுதியிலும் பாடப்படுகின்றது.
- தில்லானாவானது திரிதில்லானா என்ற தேசிய இசை முறையிலிருந்து தோன்றியதாகச் சொல்லப்படுகின்றது.
- தில்லானா 18 ஆம் நூற்றாண்டிலேயே இயற்றப்பட்டது.
- இதன் தாது (ஸ்வரம்) கவர்ச்சிகரமாகவும், மாது (ஸாகித்யம்) ஸ்வரங்கள் கலந்த ஜதிகளாகவும் சிற்சில இடங்களில் வார்த்தைகளாகவும் அமைந்திருக்கும்.
- தில்லானாவின் வேகம் பெரும்பாலும் மத்திமகாலமாகவே இருக்கும்.
- தில்லானா பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டது. சில தில்லானாக்கள் பல்லவி, அனுபல்லவியுடனும் சில தில்லானாக்கள் பல்லவி சரணத்துடனும் அமைந்திருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பன ஒவ்வொன்றும் வெவ்வேறு தாதுக்களில் அமைந்திருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி ஜதிகளைக் கொண்டதாகவும், சரணம் ஸ்வரங்களையும் வார்த்தைகளையும் ஜதிகளையும் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.
- நாட்டிய நிகழ்வில் தில்லானா 7 வது இடத்தைப் பெறுகின்றது.
- நாட்டிய நிகழ்வில் முக்கிய அம்சமாகத் திகழும் இவ்வுருப்படி இசைக்கச்சேரிகளில் இறுதியிலும், கதாகாலட்சேபங்களிலும் இடம் பெறுகின்றது.
- தில்லானாக்கள் பொதுவாக ஆதி, ரூபக தாளத்தில் அமைந்துள்ளன.
- மஹாவைத்தியநாதையர் **கௌரிநாயக** என்னும் தில்லானாவை கானடா இராகத்தில் ஸிம்ஹநந்தன தாளத்தில் இயற்றியுள்ளார்.
- தில்லானாக்கள் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இயற்றப்பட்டுள்ளன.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் தரானா என்னும் உருப்படி வகை தில்லானாவிற்கு ஒப்பானதாகும்.
- தில்லானாக்களை இயற்றியோர்
  மஹா வைத்தியநாதையர்
  குன்றக்குடி கிருஸ்ணய்யர்
  வீரபத்திர ஐயர்
  லால்குடி ஜெயராமன்
  பாலமுரளி கிருஷ்ணா
- தில்லானாவிற்கு உதாரணம்

ஜம் ஜம் தரித	–	வசந்தா	– பல்லவி சேஷய்யர்
நாதிரனாதொம்திர	–	பிலஹரி	– கே. பொன்னையாபிள்ளை
தீம்தானனன	–	ஹிந்தோளம்	– திருக்கோகர்ணம் சுப்பையா
தத்ததீம்த	–	சங்கராபரணம்	– கே. பொன்னையாபிள்ளை
தீம் ननन தில்லில்லான	–	பிருந்தாவனி	– டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா

விளக்கம் - 06 புள்ளிகள்
இயற்றியவர்கள் - 02 புள்ளிகள்
உதாரணங்கள் - 02 புள்ளிகள்

(மொத்தம் 10 புள்ளிகள்)

(iii) திருப்புகழ்

- 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றப்பட்ட பாடல்களே திருப்புகழ் பாடலாகும்.
- திருப்புகழ் என்னும் சொல் இறைவன் புகழ்பாடுதல் என்ற பொதுவான பொருளில் அமைந்திருந்தாலும், தமிழிசை உலகில் அருணகிரிநாதர் இயற்றிய சந்தப் பாடல்களுக்கே சிறப்புப் பெயராக அமைந்துள்ளது.
- அருணகிரிநாதர் சந்த நயத்தோடு 16000 பாடல்கள் பாடியிருப்பதாகத் திருவிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் வரகவி மார்க்கசகாய தேவர் கூறியுள்ள போதிலும், தற்போது 1324 பாடல்களே எமக்குக் கிடைத்துள்ளன.
- இப்பாடல்கள் வடக்குப்பட்டு சுப்ரமணியப் பிள்ளை, செங்கல்வராய பிள்ளை போன்ற அறிஞர்களின் பெரு முயற்சியால் அச்சுருவம் பெற்று அனைவரும் படித்துப் பயனுறும் வகையில் தற்போது உள்ளன.
- அருணகிரிநாதர் முருகப் பெருமான் வீற்றிருக்கும் பல்வேறு தலங்களுக்குச் சென்று முருகப் பெருமானின் புகழைப் பல பாடல்களாகப் பாடியுள்ளார்.
- இவ்வாறு அருணகிரிநாதர் சென்று பாடிய தலங்கள் 168 என்று கணக்கிடப்பட்டுள்ளன.
- அவற்றுள் காசி, ஹரித்துவார், திருக்கயிலை, ஜெகந்நாதம் ஆகிய வட இந்தியத் தலங்களும் கதிர்காமம், திருகோணமலை ஆகிய இலங்கைத் தலங்களும் அடங்கும்.
- திருப்புகழ் பாடல்கள் தூய தமிழில் அமையாமல் இடையிடையே வடமொழிச் சொற்களும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன.
- இவை முத்தும் பவளமும் சேர்த்துத் தொடுத்த மாலை போல் விளங்குகின்றன.
- 1008 சந்தங்களைக் கொண்ட திருப்புகழ் பாடல்கள் பெருமாளே என்னும் சொல்லை அந்தமாகக் கொண்டுள்ளன.
- சந்தம் என்பது குறில், நெடில் முதலான எழுத்துக்களின் அளவு பற்றியும் வல்லினம், மெல்லினம் முதலான ஓசைகள் பற்றியும் செய்யுட்களிடையே காணப்படும் வேறுபாடாகும்.
- திருப்புகழ் பாடல்களிலுள்ள 1008 சந்தங்களுக்கு அடிப்படையாக 24 சந்தங்கள் உள்ளன என்பதை ராவ்பகதூர் வ.க. செங்கல்வராயபிள்ளை, திருப்புகழ் பாடல்களுக்கு எழுதிய உரையின் மூலம் அறிய முடிகின்றது.
- இவை மூன்று அம்சங்களைக் கொண்டவை, (தனன, தன்ன, தான, தத்த, தாத்த) நான்கு அட்சரங்களைக் கொண்டவை (தனதன, தனனா, தானன, தன்னா) ஐந்து அட்சங்களைக் கொண்டவை (தனதனன, தனதனா, தனாதன, தானதன) என்றவாறு வகைப்படுத்தலாம்.
- இந்த சந்தங்களின் அடிப்படையில் திருப்புகழ் பாடல்கள் ஸப்த தாளங்கள், 35 தாளங்கள், 108 தாளங்கள், 175 தாளங்கள் போன்ற தாளங்களில் அமைந்துள்ளன.
- கர்நாடக இசையில் தந்தை போன்று மதிக்கப்படுகின்ற தாளங்கள் புத்துயிர் பெற்றது அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்புகழ்ப் பாடல்களினால் என்றால் அது மிகையாகாது.
- மேலும் திருப்புகழ்ப்பாடல்கள் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன.
- வேதங்களிலுள்ள நுண்பொருள்கள், ஆகமக் கருத்துக்கள், புராணங்கள், இராமாயண மகாபாரத நிகழ்ச்சிகள், தத்துவம், அறம், இசை போன்ற கருத்துக்களை மிக அற்புதமாக அருணகிரிநாதர் தமது திருப்புகழ்ப் பாடல்களில் உட்புகுத்தியுள்ளார்.
- திருப்புகழின் முதற்பகுதியில் பெரும்பாலானவை உலகியலைப் பற்றியதாகவும், மாங்கையர் மையலில் உழன்றுபடும் துன்பங்களைப் பற்றியனவாகவும் உள்ளன.

- சில பாடல்கள் வயது முதிர்ந்த நிலையில் பலவகையான நோய்களால் துன்புறும் மக்களின் நிலையை எடுத்துரைக்கின்றன.
- பொதுவாக எல்லாத் திருப்புகழ்ப் பாடல்களின் பிற்பகுதியும் முருகப்பெருமானின் சிறப்பியல்புகளையும் பெருங் கருணையையும் எடுத்துக் கூறுவனவாகவே அமைந்துள்ளன.
- இவ்வாறு இவரது பாடல்களில் பலவிதமான இசைக்கருவிகள், பண்கள் இராகங்கள், தாளங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பானதாகும்.
- திருப்புகழ் பாடல்களுக்கு சில உதாரணங்கள்

1. ஏறுமயிலேறி	2. உம்பர் தரு
3. இயலிசையில்	4. அபகார நிந்தை
5. முந்து தமிழ் மாலை	6. ஒரு பொழுதும் இரு
7. கருவினுருவாகி	8. முத்தைத்தரு
9. சரணகமலாலயத்தை	10. பாதிமதி
11. துள்ளுமதவேட்கை	12. பக்தியால்
13. அற்றைக் கிரைதேடி	14. கோவைசுத்தத்து

இணங்காணல்	**- 01 புள்ளி**
விளக்கம்	**- 05 புள்ளிகள்**
இயற்றியவர்கள்	**- 02 புள்ளிகள்**
உதாரணங்கள்	**- 02 புள்ளிகள்**

(மொத்தம் 10 புள்ளிகள்)

(இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 10+10 = 20 புள்ளிகள்)

'இ' பகுதி

வினா இல : 04

பாடத்திற்கமைய நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றினை ஸ்வர தாள அங்க அடையாளங்களுடன் முழுமையாக எழுதுக.
(இயற்றியவர் பெயர், இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்)

- வர்ணம் அமைந்த இராகத்தைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- ஆரோஹண அவரோஹணத்தைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- இயற்றியவர் பெயரைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- வர்ணத்தின் அங்கங்களை பொருத்தமான முறையில் குறித்திருப்பின் (03 புள்ளிகள்)
- ஸ்வரப் பகுதியை ஸ்தாயிக் குறியீட்டுடன் முழுமையாக எழுதியிருப்பின் (04 புள்ளிகள்)
- ஸ்வரப் பகுதிக்குரிய கார்வைக் குறியீடுகளை பொருத்தமான முறையில் இட்டிருப்பின் (03 புள்ளிகள்)
- சாகித்திய பகுதியை பொருத்தமான முறையில் முழுமையாக எழுதியிருப்பின் (04 புள்ளிகள்)
- அங்க ஆவர்த்தனக் குறியீடுகளைப் பொருத்தமான முறையில் குறித்திருப்பின் (03 புள்ளிகள்)

(ஒரு இராக இலட்சணத்திற்கு 01+01+01+03+04+03+04+03 = 20 புள்ளிகள்)

வினா இல : 05

20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் கர்நாடக சங்கீதத்திற்கு அளப்பெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் தொடர்பாக வினவப்படும் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) **அவரது இளமைக் காலத்தையும் கல்விப் பின்னணியையும் பற்றி தெளிவுபடுத்துக.**

(ii) **உயர்பீடங்களில் அவர் வகித்த பதவிகளைக் குறிப்பிடுக.**

(iii) **பெற்ற பட்டங்கள் விருதுகளைப் பெயரிடுக.**

(iv) **அவர் இயற்றிய நூல்கள், மொழி பெயர்த்த நூல்கள் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.**

(i) **அவரது இளமைக்காலத்தையும் கல்விப் பின்னணியையும் தெளிவுபடுத்துக.**

- தஞ்சை மாவட்டத்தில் திருப்பூந்துருத்தி என்னும் மாவட்டத்தில் 14.02.1901 ஆண்டு பிறந்தார்.
- தாய் பார்வதி அம்பாள், தந்தை - பிச்சுவையர்
- சிறுவயதில் வயலினும், வாய்ப்பாட்டும் பயின்றார்.
- மனத்தட்டை துரைச்சாமி ஐயரிடம் இசை பயின்றார்.
- ஆங்கிலக் கல்வியைக் கற்றார்.
- சென்னை சட்டக்கல்லூரியில் சட்டத்துறையில் கல்வி கற்றார்.
- இசை மேதைகளின் இசை நிகழ்ச்சிகளை கேட்பதிலும் ஆர்வம் செலுத்தினார்.
- 1931 இல் ஜேர்மனி தேசத்தில் மியூனிச் நகரில் இராகாங்க இசைக்கழகத்திலும் பல்கலைக் கழகத்திலும் இசை ஒலி இயலில் சிறப்பாக பயிற்சி பெற்று ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார்.
- மேல் நாட்டிசையும் ஒப்பியல் இசையும் கற்றார்.
- மேலும் பல இந்தியமொழியிலும் தேர்ச்சி பெற்றார்.
- வடமொழி, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஜேர்மன், இலத்தீன் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.

(06 புள்ளிகள்)

(ii) **உயர்பீடங்களில் அவர் வகித்த பதவிகளைக் குறிப்பிடுக.**

- 1928 இல் சென்னை ராணி மேரிக் கல்லூரியில் இசை விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.
- 1937 இல் சென்னை பல்கலைக்கழகத்தில் இசைத் துறை தலைவராக பதவி வகித்தார்.
- 1961 - 1974 வரையில் சங்கீத வித்தியாலய இயக்குனராக கடமை ஏற்றார்.
- 1964 - 1966 வரையில் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழத்தில் அறிஞர் குழு அங்கத்தவராகவும் இருந்தார்.
- திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றியமை.
- வித்துவ சபையில் அறிஞர் குழு அங்கத்தவராகவும், இசை ஆசிரியர், இயக்குனர், பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.
- அகில பாரத சங்கீத நாடக சங்க அங்கத்தவராகவும் இருந்தார்.
- சங்கீத நாடக ஆராய்ச்சி துறையின் இணை உறுப்பினராகவும் இருந்தார்.
- பல்கலைக்கழக மானிய கமிசனின் பேராசிரியராக கடமையாற்றினார்.
- இசை ஆராய்ச்சி முன்னேற்றத்திற்கு உதவி செய்தார்.

- இந்திய இசைக்குழுவின் தலைவராக 1955 மணிலாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- கோடைக்கால வகுப்புக்கள், பாடத்திட்டம் தயாரித்தல்.
- இசை பரிசோதகராகவும் பணியாற்றியுள்ளார்.

(05 புள்ளிகள்)

(iii) **பெற்ற பட்டங்கள் விருதுகளைப் பெயரிடுக.**

பத்ம பூசணம்
இசைப் பேரறிஞர்
சங்கீத கலாநிதி
சங்கீத சாஸ்திர ரத்னாகரர்
ஜேர்மனியில் பேராசிரியர் பட்டம்
கீத வாத்திய விநோத
BA பட்டம் பெற்றார்
1926 இல் சட்டத்தரணி பட்டம்

(05 புள்ளிகள்)

(iv) **அவர் இயற்றிய நூல்கள், மொழி பெயர்த்த நூல்கள் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.**

இயற்றிய நூல்கள்

- வடமொழி, ஆங்கிலத்தில் அமைந்த நூல்கள், தமிழ்மொழியில் அமைந்த இசை நூல்கள்
- இசை சம்பந்தமான கையெழுத்துப்பிரதிகள்
- அணிநடை கீதம்
- முக கீதம்
- மணிப்பிரபாள கீதம்
- இராகமாலிகை
- வடமொழி, தெலுங்கு, தமிழ் மொழிகளில் இயற்றியுள்ளார்.
- இசை அகராதி மூன்று தொகுதிகள்.
- 50ற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- ஐரோப்பிய இசைக்கும் இந்திய இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ச்சி செய்தார்.
- **மேல்நாட்டு இசையின் அம்சங்கள்** என்னும் நூலை எழுதியுள்ளார்.
- வாத்திய இசை, வாத்தியங்கள் பற்றிய நூல்கள்
- இசை போதிக்கும் முறை, கிரக பேத பிரதர்சினி, பிரதர்சன வீணை
- வாக்கேயக்காரர்கள் பற்றி எழுதியுள்ளார்.
- மும்மூர்த்திகளின் இல்லங்களையும், கையெழுத்து பிரதிகளையும் வேறு பொருட்களையும் துருவி ஆராய்ந்து பொதுமக்கள் அறியும்படி பல ஸ்தாபனங்களை நிலைப்படுத்தி வைத்துள்ளார்.

மொழி பெயர்த்த நூல்கள்

- நௌக்கா சரித்திரம் - தியாகராஜசுவாமிகள்
  சுந்தரேசவிலாசம் - செல்வராஜ சாஸ்திரி
  பல்லகிஷேவா பிரபந்தம் - சகாஜி மகாராஜா ஆகிய தெலுங்கு நூல்களை தமிழில் மொழி பெயர்த்தார்.
- சிறந்த கீர்த்தனைகளை தெரிவு செய்து இசைக் குறியீடுகளுடன் **கீர்த்தனா சாகரம்** எனும் தலைப்பில் 5 பாகங்களை வெளியிட்டார்.

(04 புள்ளிகள்)

(இவ் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 06+05+05+04 = 20 புள்ளிகள்)

வினா இல : 06

பின்வரும் இராகங்களில் இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.

(i) **மாதவை நிதி எனும் சௌகால கீர்த்தனை அமைந்துள்ள இராகம்**

(ii) **ஸ்ரீரஞ்சனி**

(iii) **ஹம்பீர் என்று அழைக்கப்படும் இராகம்**

(iv) **ஹிந்துஸ்தான்காபி**

(i) வஸந்தா

(ii) ஸ்ரீரஞ்சனி

(iii) ஹமீர்கல்யாணி

(iv) ஹிந்துஸ்தான்காபி

- ஜன்னிய இராகமாயின் தாய் இராகத்தின் மேள எண்ணையோ அல்லது தாய் இராகத்தின் பெயரையோ குறிப்பிட்டிருப்பின் அல்லது வினாவின் அடிப்படையில் இராகத்தினை இனங்கண்டிருப்பின் (01 புள்ளி)

- ஆரோஹண, அவரோஹணத்தினைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஜீவ, நியாஸ, கிரக ஸ்வரங்களைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- இராக விபரங்களை எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)

- இரண்டு உருப்படிகளை உதாரணமாக குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- பொருத்தமான சஞ்சாரம் எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)

ஒரு இராக இலட்சணத்திற்கு 01+01+01+01+02+02+02 = 10 புள்ளிகள் வீதம்

இரண்டு இராக இலட்சணங்களுக்கும் : (10 + 10 = 20 புள்ளிகள்)

வினா இல : 07

(i) **பயான், தயான் ஆகிய பாகங்களை உடைய தாளவாத்தியத்தின் பெயரினைக் குறிப்பிடுக.**

(ii) **மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தினை வரைந்து அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக.**

(iii) **மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.**


(iv) **இவ் வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.**

(v) **மேற்கூறப்பட்ட வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் மூவரைக் குறிப்பிடுக.**

(i) **பயான், தயான் ஆகிய பாகங்களை உடைய தாளவாத்தியத்தின் பெயரைக் குறிப்பிடுக.**

- தபேலா **(02 புள்ளிகள்)**

(ii) **மேலே 1 இல் பெயரிட்ட வாத்தியத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறித்துப் பெயரிடுக.**



பாகங்கள்

1. பயான்
2. தயான்
3. குண்டி
4. லகடி
5. சாண்டி
6. ஸ்யாஹி (கரணை)
7. லவ
8. மைதான்
9. கஜரா
10. குஜரி
11. கட்டா

(படம் வரைந்து பாகங்களை சரியாகக் குறித்திருப்பின் 05 புள்ளிகள்)

(iii) **மேலே 1 இல் பெயரிட்ட வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.**

- தபேலா இரண்டு பாகங்களால் ஆனது
- இடது கையால் வாசிக்கப்படுவது பயான்
- வலது கையால் வாசிக்கப்படுவது தயான்
- பயான் மண்ணினாலோ, செம்பினாலோ ஆக்கப்பட்டிருக்கும்.
- தயான் மரத்தினால் ஆக்கப்பட்டிருக்கும்.
- இரண்டினதும் மேற்பாகமானது தோலினால் மூடப்பட்டிருக்கும்.
- உருளை வடிவமான மரத்துண்டுகள் தபேலாவில் பொருத்தப்பட்டிருக்கும்.
- தபேலாவின் மேற்புறத்தின் நடுவில் ஸ்யாஹி எனப்படும் கறுப்புப்பசை நிரந்தரமாகப் பூசப்பட்டிருக்கும்.
- இது மத்தியில் இல்லாமல் ஓர் கரையை அணண்மித்து இருக்கும்.

- தபேலா 12 அங்குலம் முதல் 15 அங்குலம் வரை நீளமுள்ளது.
- தயானை விட பயான் 1 அங்குலம் அல்லது 2 அங்குலம் குறைவானது.

(06 புள்ளிகள்)

(iv) **இவ் வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.**

- ஹிந்துஸ்தானி இசைக் கச்சேரிகளில்
- தென்னிந்தியாவில் பக்தி பாடல்
- மெல்லிசைப் பாடல்
- பஜனைப் பாடல்
- கதக் நடனம்
- தற்காலத்தில் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில்

வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டிருப்பின் = 04 புள்ளிகள்

(v) **மேற்கூறப்பட்ட வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் மூவரைக் குறிப்பிடுக.**

- அபான் E மிஸ்ரி
- உஸ்தாத் அல்லாரக்காகான்
- உஸ்தாத் ஸாகிர்ஹுசைன்
- முகமது அகமதுகான்
- ஓம் கார் குல்வாடி
- சுரேஷ்தல் வார்கார்

இவற்றுள் எவரேனும் 3 பெயரைக் குறிப்பிட்டிருப்பின் = 03 புள்ளிகள்

(இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் - 02+05+06+04+03 = 20 புள்ளிகள்)

வினா இல : 08

மேலைத்தேய இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பாக் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத் தொண்டினையும் எழுதுக.

அல்லது

உமது பாடசாலை கலைவிழாவில் இடம்பெற்ற குழு இசைப்பாடல் நிகழ்ச்சி ஒன்றினைத் தயார் செய்யும் செயற்பாட்டொழுங்கினைச் சுருக்கமாகத் தருக.

(20 புள்ளிகள்)

மேலைத்தேய இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பாக் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத் தொண்டினையும் எழுதுக.

வாழ்க்கை வரலாறு

- இவர் Eisenach என்னும் இடத்தில் இசைக்குடும்பத்தில் பிறந்தார்.
- இவரது முன்னோர்களும் உறவினர்களும் சிறந்த ஆர்கன், பிடில் ஓபோ (Oboe) விற்பன்னர்களாக இருந்தனர்.
- பாக்கின் தந்தை ஜோகான் அம்போருஸியஸ் (Johann Amborosuis) அரண்மனை வித்துவனாக விளங்கியவர்.
- இவரே பாக்கின் முதல் குருவாவார்.
- இவர் இளம் வயதிலேயே இயற்கையை ரசிப்பவராக விளங்கினார். தன் தாயாரிடம் தோட்டத்தில் அமர்ந்திருந்து மத சம்பந்தமான விளக்கங்களையும் பெறுவார்.
- பாக் தனது 9 ஆவது வயதிலே தாயையும் அதன் பின் தந்தையையும் இழந்தார்.
- பாக்கின் மூத்த சகோதரரான ஜோகான் கிறிஸ்தோப் பாக்கையும் அவரின் மற்றைய சகோதர்களையும் பொறுப்பேற்றார்.
- இவர் Ohrdruf என்னும் இடத்தில் பாடசாலைக் கல்வியை மேற்கொண்டார்.
- பாக் பெரும்பாலும் வாக்கேயக்காரர்கள் இயற்றிய பாடல்களை பார்த்தெழுதுவதை பொழுதுபோக்காக மேற்கொண்டார்.
- இவரது 15 ஆவது வயதில் தன் நண்பருடன் Luneburg என்னும் இடத்திற்குச் சென்று அங்கு St. Michal Convent இல் சமயப் பாடல்களை பாடுபவராக Choir boy ஆகச் சேர்ந்தார்.
- இவர் முதன் முதலாக தனது 18 ஆவது வயதில் Arnstadt என்னும் இடத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் பாடகர் குழுத் தலைவராகவும் (Choir master) ஆகவும் ஆகன் வாசிப்பவராகவும் பொறுப்பேற்றார். இவர் தம் உறவினரான மரியா பாபராவை மணந்தார். இவரது முதல் மனைவி இறந்ததும் Anna Magdalena என்னும் பெண்ணை மணந்தார்.
- கடைசிக் காலத்தில் கண் பார்வை முற்றாக நீங்கி பாரிச வாதத்தால் பீடிக்கப்பட்டு 1750 ஆம் ஆண்டு இறந்தார்.

(10 புள்ளிகள்)

இசைப்பணி

- இவர் Easter Cantata என்னும் இசை ஆக்கத்தை தம் மாணவர்களுக்காக எழுதினா.ர்.
- Saxe Weimar இல் (Duke) உள்ள சீமான் இவரது திறமையை உணர்ந்து இவரை ஆர்கன் வாசிப்பவராக நியமித்தார்.
- முதன் முறையாக பாக் தன் வேலையில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தார். இக்காலத்திலேயே இவர் சிறந்த ஆர்கனுக்குரிய இசை வடிவங்களை (Organ Music) ஆக்கினார்.
- Toccto Fugue - D, Minor, Prelud, Fugue - D என்பவை இக்காலத்திலே இவரால் எழுதப்பட்டவையாகும்.
- இவர் கிளவிகோட் Clavichord வயலின் வாசிப்பதிலும் திறமை உள்ளவராக இருந்தார்.
- இவர் 1714 ஆம் ஆண்டில் Concent Master ஆக நியமனம் பெற்றார்.
- இவர் தாம் ஒருவராகவே கூட்டிசைகளை ஆக்கவும் நேரத்தை ஒதுக்கவும் திறமைப் பெற்றிருந்தார்.
- பாக் மிகவும் பிரபல்யமான 6 Banden Burg Concertos இயற்றினார்.
- தனது 9 வயது மகளுக்காக Little book for the keyboard இயற்றினார் இவரது ஆக்கங்களில் பிரபல்யமானவை.
  Mass in B - Minor
  St. Mathew Passion
  Chridtmas oratoria என்பவையாகும்.
- இவர் ஒரு குருடராக இருந்த போதும் நான் சிங்காசனத்திற்கு வருகிறேன் என்ற கூட்டிசைப் பாடலை இயற்றியிருந்தார்.
- பாக் குடும்பம் ஆறு தலைமுறைகளாக ஜேர்மனிக்கு பிரபல்யமான இசை அறிஞர்களை அளித்தது. இவர் கிளவிகோட் என்ற வாத்தியம் இசை கூட்டப்படும் முறையை பரிபூரணப்படுத்தினார்.
- இவரது இசை பிரபல்யமாகி பலராலும் போற்றப்படுவதற்கு 100 ஆண்டுசென்றன.
- இசைக்கருவிகளை வாசிக்கும்போது ஐந்து விரல்களைப் பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தினார்.

(10 புள்ளிகள்)

(இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10+10 = 20 புள்ளிகள்)

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

அல்லது

உமது பாடசாலை கலைவிழாவில் இடம்பெற்ற குழு இசைப்பாடல் நிகழ்ச்சி ஒன்றினைத் தயார் செய்யும் செயற்பாட்டொழுங்கினைச் சுருக்கமாகத் தருக.

- உமது பாடசாலைக் கலைவிழாவில் இடம்பெற்ற குழு இசை பாடல் நிகழ்ச்சி ஒன்றினைத் தயா.ர் செய்யும் செயற்பாட்டு ஒழுங்கினை சுருக்கமாகத் தருக.

- குழு இசை தொடர்பான நேர ஒதுக்கீடு, நிதி ஒதுக்கீடு, உடை, அலங்காரங்கள், ஏனைய விடயங்கள் தொடர்பாக சங்கீத பாட ஆசிரியர், அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர், நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- மாணவர்கள் தெரிவு தொடர்பான குறிப்புக்கள் **(02 புள்ளிகள்)**

- குழு நிகழ்ச்சிக்கு தெரிவு செய்த உருப்படிகள், பாடல்கள், இராகங்கள், தாளங்கள் பற்றிய குறிப்புக்கள் **(02 புள்ளிகள்)**

- மாணவர்களுக்குரிய பயிற்சி நேரங்கள் பற்றிய குறிப்புக்கள். **(02 புள்ளிகள்)**

- பயிற்சியில் குழு ஒத்திசைவு, சுருதி சுத்தம், பாவம், லயம், மனனம் தொடர்பான குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- பொருத்தமான பக்கவாத்தியத் தெரிவு, அவற்றுடனான பயிற்சி தொடர்பான குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- ஒத்திகை நிகழ்வில் மாணவர்கள் அமர்ந்திருக்கும் நிலை, பாடல்களைப் பாடும் ஒழுங்கமைப்பு, குழு ஒத்திசைவு பற்றிய அவதானிப்பு, பக்க வாத்தியங்களின் பங்களிப்புக்கள், ஒளி, ஒலி அமைப்பு பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- ஒத்திகை நிகழ்வின் பின் சீர் செய்யப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- குறித்த தின கலைவிழாவில் மேடையேற்றுவதற்குரிய தயார் நிலை பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

- மேடை ஏற்றுதலும் மாணவர்களின் நிகழ்த்துகை தொடர்பான குறிப்புக்களும் காணப்பட்டிருப்பின் **(02 புள்ளிகள்)**

(இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் - 02+02+02+02+02+02+02+02+02+02 = 20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(40) WWW.PastPapers.WiKi (40)



2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)

රු 1,200.00

or 3 X රු 400.00 with KOKO



2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Art Past Paper Book (Tamil Medium)

රු 500.00

or 3 X රු 166.67 with KOKO



2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO



2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO



2024 A/L ET Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L BST Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO



2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)

රු 1,100.00

or 3 X රු 366.67 with KOKO



2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO



2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO



2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO



2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)

රු 1,050.00

or 3 X රු 350.00 with KOKO

LOL STORE PVT LTD Copyright ©2023